முன்பு. ஆக, இப்படி ஒரு மாதகாலம் குடிநீரிலே கழிவு நீர் கலந்து, சென்னையில் வாழும் மக்கள் அடிக்கடி பல நோய் களுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்று இங்கே அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அமைச் சரவர்களால் அறிவிக்கப்படுகிறது. விரைவிலே இன்னும் சில நாட்களிலே இது போக்கப்படும் என்று, இது எப்படிப்பட்ட காரி யம்? இதற்கு முன்புகூட சில நேரங்களில் இப்படி நடப்பது உண்டு. ஆனால், போர்க்கால நடவடிக்கைகள் மாதிரி, ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களிலே அது தீர்க்கப்பட்டிருக்கிறது என்பது நாங்கள் அனுபவத்திலே கண்டது. ஆனால், இன் றைக்கு இந்த வாரியத்தினுடைய திறமை எந்த அளவுக்கு இருக் கிறது என்றால், ஆமை வேகமாகச் செயல்படுகிறது. பொது மக்கள் பிரதிநிதிகள் இல்லாதநிலையில், இதை அமைச்சரவர்கள் சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி குடிநீரிலே கழிவு நீர் கலப்பதைக் கண்டு பிடித்த அதிகாரிகள், அந்த பைப்புகள் பழுதடைந்து இருந்தால், அந்த வீட்டுக்குச் சொந்தக்காரரே அந்த பைப்புகளை வாங்கிக் கொடுக் வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். வீட்டுக்குள்ளே கெட்டுவிட்டால், வீட்டுச் சொந்தக்காரர் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், அந்த ரோடு பகுதியில் அந்த பைப் கெட்டு விட்டால், அதை வாரியமே செலவு செய்து வாங்குவதுதான் முறை. அந்த முறையை மாற்றி, இப்படி வேண்டுமென்றே பொதுமக்களுக்குத் தொல்லைதரும் ஸ்தாபனமாக, ஆமை வேகத்தில் செயல்புரியும் ஒரு ஸ்தாபனமாக வாரியம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(விடை இல்லை.)

(13) அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாதது குறித்து.

திரு. வ. துலுக்காணம்: தலைவரவர்களே,

" விருத்தாசலம் வட்டம், சேப்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஏழை அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாததால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு.பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

1979 நவம்பர் 10] (திரு. பெ. சௌந்தரப்பாண்டியன்)

அறிக்கை.

தாழ்த்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, தேவை, விடுதி அமைப்பதற்குத் தேவையான கட்டடம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு ஒவ்வொரு ஆண்டும் விடுதிகள் திறக்க இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் பரிசீலனை செய்து வருகிறது.

2. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சேப்பாக்கத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவியர்கள் விடுதி இல்லாத காரணத்தால் பள்ளியை விட்டு வெளியேறுகிறார்கள் என்றும் மேலும் இந்நிகழ்ச்சியால் அந்த வட்டாரத்தில் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது என்றும் சாட்டுரைத்துள்ளார்.

3. மாணவியர்கள் விடுதி வசதியின்றி உயர்நிலைப்பள்ளியை விட்டு வெளியேறுவது பற்றி இதுவரையிலும் எந்த மனுவும் அரசுக்கு வரவில்லை.

4. 1979–80–ம் ஆண்டிற்கு அரசு 15 விடுதிகள் திறப்பது பற்றி ஆராய்ந்து ஆணையும் வெளியிட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள 15 விடுதிகளில், தென் ஆற்காடு மாவட்டம், சேப்பாக்கத்தில் 50 மாணவிகள் தங்குவதற்கான விடுதியும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட 15 விடுதிகள் திறப்பதற்கு சமூக நலத்துறையின் மூலம் 30—10—1979-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவ்விடுதியினை உடனே திறப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கும்படி அரிசன மற்றும் பழங்குடியினர் நல இயக்குனர் கேட்கப்பட்டுள்ளார்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு விடுதியைத் திறந்து விட்டார்கள் என்ற எண்ணத்திலும், அங்குள்ள அதிகாரிகள் பள்ளி மாணவிகளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்ன உறுதியின் பேரிலும், வெளியூரைச் சேர்ந்த மாணவிகளைச் சேர்த்துவிட்டார்கள். ஆனால் தற்பொழுது தங்கும் விடுதியில்லாமல், வெளியூரிலேயிருந்து வரும் மாணவிகள் இந்தப் பள்ளியைவிட்டு வேறு பள்ளிகளில் சேரலாம் என்றாலும் அங்கும் இடம் கிடையாது. ஆகவே, அங்குள்ள மாணவிகள் இரண்டு ஆட்டுக்குட்டியைப்போல், அங்கே தங்கி படிக்க முடியாமலும், எங்கும் போய் சேரமுடியாமலும் தவிக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசாங்கம் விடுதியைத் திறந்து, அந்த மாணவிகள் அங்கு தங்கி படிக்கின்ற வசதிக்கு ஏற்பாடு செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட சேப்பாக்கம் விடுதி திறப்பதற்கு 30—10—1979 அன்று ஆணையிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

(14) மாயவரத்தில் டீசல் தட்டுப்பாடு குறித்து

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே,

''மாயூரம் வட்டத்தில் டீசல் தட்டுப்பாட்டால் டிராக்டர், லாரி இயங்காததால் விவசாயிகள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அவை முன் அறிக்கை வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

தற்போது தஞ்சாவூர் மாவட்டத்திற்கு சராசரியாக 2700 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் மாதந்தோறும் வழங்கப் படுகிறது. இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் 2780 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. குறுவை நெல் அறுவடை காரணமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தினால் மாவட்டத்தின் உள்ளேயும் தனியார் நிறுவனங் களால் மாவட்டத்தின் வெளியேயும் போக்குவரத்து நடமாட்டம் அதிகமானதின் காரணமாக டீசலுக்கான தேவை பெருகியது. இது சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டு அக்டோபருக்கான அதிக தேவை 10 சதவீதம் என எதிர்பார்க்கப்பட்டது. எனவே தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் அம்மாதத்திற்கு கூடுதலாக 300 கிலோ லிட்டர் டீசல் ஒதுக்கீடு செய்யுமாறு போக்கு வரத்து ஆணையாளர் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு கூடுதலாக 300 கிலோ லிட்டர் ஒதுக்கீடு வழங்கப்பட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில ஒழுங்கிணைப்பாளர் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் வட்டார அலுவலரைக் (விற்பனை) கேட்டுக் கொண்டார்.

2. தற்சமயம் விற்பனையாளர்களால் 10 சத விகிதம் டீசல் கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டு வருகிறது என்றும் அதன் காரணமாக அளிப்பு நிலை சாதாரண நிலைக்கு வ்ந்துவிடு